2023 ஏப்ரல் 19]
189—

மின்மாற்றி

***38432—திரு. க. அன்பழகன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) *கும்பகோணம் தொகுதி, அத்தியூர் ஊராட்சி, குருகூர் கிராமத்தில் மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

முற்பகல் 10–50

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) *மற்றும்* (ஆ) *26–3–2021 அன்று உச்ச மின்நுகர்வு 16 ஆயிரத்து 481 மில்லியன் யூனிட் என்பதும், நேற்று 18–4–2023 அன்று 18 ஆயிரத்து 882 மெகாவாட் ஆக உயர்ந்தும், அதேபோல் ஒருநாள் அதிகபட்ச மின்சார பயன்பாடு என்பது 2019–2020–ல் 36.9 கோடி யூனிட் என்பது, நேற்று 18–4–2023 அன்று 41.30 கோடி யூனிட்டாக உயர்ந்தும் எந்தவிதத் தடையும் இல்லாமல் சீரான மின்சார விநியோகம் செய்து மாண்புமிகு முதலமைச்சர் தளபதி அவர்களின் அரசு சாதனை படைத்துள்ளது என்பதை பேரவைக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம், அத்தியூர் ஊராட்சியில் உள்ள குருகூர் கிராமத்தில் மின்னழுத்தத்தை ஏற்றம் செய்வதற்கு அத்தியூர் மின்மாற்றியின் தாழ்வழுத்த மின்பாதையில் 727 மீட்டர் தூரத்திற்கு மின்கம்பிகளைத் தரமுயர்த்தும் பணி 12–10–2022 அன்று முடிக்கப்பட்டு, 2 மின்மாற்றிகள்மூலம் அப்பகுதிக்கு சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.*

திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தியூர் ஊராட்சிக்கு சீரான மின்சாரம் வழங்கப்படுகிறது என்று தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

தஞ்சை மாவட்டம், கும்பகோணம் தொகுதியில் மொத்தம் 39 ஊராட்சிகள், 2 பேரூராட்சிகள், 48 வட்டங்கள் உள்ளன. மிகவும் பின்தங்கிய பகுதியாக உள்ள அத்தியூர் ஊராட்சி, அதனை ஒட்டிய குருகூர், குமரன்குடி, பாதாரக்குடி, உத்தமதானி, தேவனாஞ்சேரி, விளந்தகண்டம், சோழபுரம், கோவிலாச்சேரி, அகராத்தூர், திருநல்லூர் போன்ற கிராமங்களில் மின்கம்பங்கள் சாய்ந்தும், மின்கம்பிகள் தொங்கியும், கூரையைத் தொடுவதுபோல் இருக்கின்ற காரணத்தினால் பல விபத்துகள் நடக்கின்றன. அப்படிப்பட்ட விபத்துகள் வருங்காலத்தில் நடக்காமல் இருப்பதற்கு நம்முடைய மாண்பிற்கினிய அமைச்சர் அவர்கள் அத்தியூர் ஊராட்சிக்கும், குமரன்குடிக்கும் மின்மாற்றி அமைத்துத் தருவார்களா என்று கேட்டுக்கொள்கிறேன்.

கும்பகோணம் மாநகராட்சியில் தற்போது விரிவாக்கம் செய்யப்பட்ட பல பகுதிகள் இணைக்கப்படுவதால், இணைக்கப்படவிருக்கும் பகுதிகளில் இருமுனை மற்றும் மும்முனை மின்சாரம் என்று மாறிமாறி தற்போது வழங்கப்பட்டு வருவதால், அதனைத் தொடர்ந்து மும்முனை மின்சாரமாக வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் சட்டமன்றத் தொகுதியில் சீரான மின்சாரம் வழங்குவதற்காக 2 ஆண்டுகளில் 120 புதிய மின்மாற்றிகள் அமைக்கப்பட்டு, பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ள அத்தியூர் பகுதியில் கூடுதலாக மின்மாற்றி தேவையெனில் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும்.*

2023 ஏப்ரல் 19]

அதேபோல், சீரான மின்சார விநியோகத்திற்காக கும்பகோணம் தொகுதிக்கு மட்டும் 3 துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி வழங்கியிருக்கின்றார்கள். கும்பகோணம் மாநகராட்சியில் விரிவுபடுத்தப்பட்ட பகுதிகளில் மும்முனை மின்சாரம் வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். துறையின் சார்பாக அலுவலர்களை அனுப்பி, அந்தப் பகுதிகள் ஆய்வு செய்யப்பட்டு, கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஒன்றரை இலட்சம் விவசாயிகளுக்கு இலவச பம்ப்செட்டுடன் மின்சாரம் வழங்கிய மாண்பிற்கினிய முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி சொல்லி, மேலும் 50 ஆயிரம் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்புகள் வழங்கப்படுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அவர்களுக்கும் விவசாயிகளின் சார்பில் மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கும்பகோணம் மாநகராட்சி, திருக்கொட்டையூர், பாலக்கரை உள்ளிட்ட 5 வட்டங்களில் குறைந்த மின்னழுத்தம் இருப்பதைத் தெரிந்து, பலதடவை நான் இந்த மாமன்றத்தில் 33/11 KV துணை மின் நிலையம் வேண்டுமென்று உரையாற்றியிருக்கிறேன். மாண்பிற்கினிய முதலமைச்சர் அவர்களின் தலைமையில் கழக அரசு அமைந்ததற்குப் பிறகு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கும்பகோணம் அரசு கலைக் கல்லூரிக்குப் பின்புறம் இடம் இருப்பதாகவும், அந்த இடத்தைத் தேர்வு செய்து, நிச்சயமாகச் செய்து கொடுப்பதாக உறுதியளித்தார். அப்படியென்றால், அந்தத் துணை மின் நிலையம் ஆரம்பிக்கப்பட்டுவிட்டதா, அந்தப் பணி எந்த நிலையில் இருக்கிறது என்பதை கும்பகோணம் மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடந்தையில் 12 தேர்கள் பவனி வருகின்ற தெருக்களின் பாதைகளில் புதைவடக் கம்பிகள் அமைத்துத் தருவதாக

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருந்தார்கள். அந்தப் பணிகளின் முன்னேற்றம் எந்த நிலையில் இருக்கிறது என்பதையும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து தருவார்களா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணை மின் நிலையம் அமைப்பதற்கு 2.71 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு, நிலம் வகைமாற்றம் செய்யக்கூடிய பணிகள் நடைபெற்று வருகின்றன. அதேபோல, புதைவடக் கம்பிகள் அமைக்கக்கூடிய பணிகளுக்குத் திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இரண்டு பணிகளும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பொற்கால ஆட்சியில் நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. A.K. செல்வராஜ் அவர்கள்.

முற்பகல் 10–55

திரு. A.K. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் மரியாதைக்குரிய அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். மேட்டுப்பாளையம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வெள்ளியங்காடு கிராமத்தில் துணை மின் நிலையம் அமைப்பதற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் இடம் தருவதற்குச் சம்மதம் தெரிவித்து கடிதம் கொடுத்திருக்கிறது. ஆகவே, வெள்ளியங்காட்டில் ஒரு துணை மின் நிலையத்தையும்—அதேபோன்று காரமடை பகுதி, சிக்காரம்பாளையம் கிராமப் பகுதியில் அதிகமான அளவில் தொழில்களும், புதிய, புதிய தொழிற்சாலைகளும் வந்து கொண்டிருக்கின்றன—வடவள்ளி பகுதியில் மற்றொரு துணை மின் நிலையத்தையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அமைத்துத் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2023 ஏப்ரல் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளியங்காடு பகுதியில் 1.19 ஏக்கர் நிலமும், வடவள்ளி பகுதியில் 2.88 ஏக்கர் நிலமும் தேர்வு செய்யப்பட்டு நில வகைமாற்றம் செய்யும் பணிகள் நிறைவுபெற்றுள்ளன. திட்ட மதிப்பீடுகள் முடிந்து, ஒப்பந்தப்புள்ளி கோரும் பணிகள் முடிந்த பிறகு, அந்தப் பணிகள் உடனடியாகத் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.ஜி. இராஜேந்திரன் அவர்கள்.*

திரு. வி.ஜி. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். பூண்டி ஒன்றியத்திலுள்ள கனகவல்லிபுரத்தில் துணை மின் நிலையம் அமைக்கப்படும் என்று அறிவித்து, அதற்குரிய இடத்திற்கும்* enter upon permission *கொடுத்த பிறகு, அப்பணி கைவிடப்பட்டதாகத் தற்போது தெரிகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து அதைக் கவனித்து, உடனே அந்தப் பகுதியில் ஒரு துணை மின் நிலையம் அமைக்குமாறு தங்கள் வாயிலாக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே என்னிடத்தில் இதைச் சுட்டிக்காட்டியிருந்தார்கள். துறையின் அதிகாரிகளுடன் பேசி, கனகவல்லிபுரத்தில் 14.88 ஏக்கர் நிலப்பரப்பில் புதிய துணை மின் நிலையம் அமைக்கக்கூடிய பணிகள் தொடர்ந்து செய்திட வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. கண்டிப்பாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அங்கே துணை மின் நிலையம் அமைப்பதற்கு துறை நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடுமலைப்பேட்டை நகராட்சிக்குட்பட்ட, தாராபுரம் சாலை–திருப்பூர் சாலைக்கு இடையில் 2 கி.மீ. புறவழிச் சாலை அமைக்கப்பட்டிருக்கிறது. அதில் ஒன்றரை கி.மீ. அளவிற்கு இருவழிச் சாலை அமைக்கப்பட்டிருக்கிறது. அரை கி.மீ. அளவிற்கு ஒருவழிச் சாலையாக இருக்கிறது. மேலும், ½ கி.மீ. அளவிற்கு தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குச் சொந்தமான இடம் இருக்கிறது. அந்த இடத்திற்கு, நகராட்சியில் 55 இலட்சம் ரூபாய் கட்ட வேண்டும் என்று மின்சார வாரியம். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், இது மூல வினாவிற்கு சம்பந்தமில்லாதது. துணை மின் நிலையம் வேண்டுமானால் கேட்க வேண்டும்.*

திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *துணை மின் நிலையம் இல்லை ஐயா.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் அந்த இடப் பிரச்சினை குறித்து தனிக் கேள்வி கேட்க வேண்டும். (குறுக்கீடு)*

திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *ஒரேயொரு நிமிடம் கொடுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் நா. எழிலன் அவர்கள்.*

டாக்டர் நா. எழிலன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் நேற்று வரலாற்று நிகழ்வாக 41.30 கோடி யூனிட் மின் பயன்பாட்டுத் தேவையைத் தடையின்றி வழங்கிய திராவிட மாடல் அரசை வாழ்த்துகிறேன். ஆயிரம் விளக்கு தொகுதியில் அமைந்துள்ள சிவசங்கரன் மற்றும் ஹாரிங்டன் சாலைகளிலுள்ள மின்மாற்றியை RMU ஆக மாற்றியமைக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

2023 ஏப்ரல் 19]

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரப் பகுதிகளில், விடுபட்ட இடங்களில்* RMU *அமைக்கக்கூடிய பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. விரைவில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற பகுதியில்* RMU *அமைக்கக்கூடிய பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 190, மாண்புமிகு உறுப்பினர் திரு.* S. *சேகர், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

190—

மருத்துவமனைக்குக் கட்டடம்

***86653—திரு. *S.* சேகர்:**

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) *பரமத்தி-வேலூர் தொகுதி, பரமத்தி-வேலூர் வட்ட மருத்துவமனைக்கு புதிய கட்டடம் கட்டவும், அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும் அரசு முன்வருமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) *மற்றும்* (ஆ) *நாமக்கல் மாவட்டம், பரமத்தி-வேலூர் பேரூராட்சியில் 76 படுக்கைகள் வசதியுடன் வட்ட அரசு மருத்துவமனை ஒன்று மிகச் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறது. அந்த மருத்துவமனையில் குழந்தைகள் பிரிவு, மகப்பேறு பிரிவு, பல் மருத்துவப் பிரிவு, புற நோயாளிகள் பிரிவு, விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு, நவீன சமையலறை, குளிர்சாதன வசதியுடன்கூடிய பிணவறை, தொற்றா நோய் சிகிச்சைப் பிரிவு,* dialysis, *சித்தா பிரிவு போன்ற பல்வேறு பிரிவுகள் அங்கே*